வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.4848/அ2/2024 நாள்: .05.2025

பொருள் : பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – பொது வைப்பு நிதி/ பணிக்கொடை/பங்களிப்பு ஓய்வூதியம் – ஆகிய ஓய்வூதிய பலன்களுக்குரிய நீண்ட நாள் நிலுவை இனங்கனை விரைவாக உரிய நடவடிக்கை மேற்கொண்டு முடித்து அனுப்ப கோருதல் – சார்பாக

பார்வை : பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறை ந.க.எண்.079798/R1/S1/2024 நாள். 07.05.2025

********

பார்வையில் காணும் செயல்முறைகளின்படி அரசு/நிதியுதவி/ நகரவை/ உயர்/ மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களின் ஓய்வு பெற்ற/ ஓய்வு பெற உள்ளவர்களின் ஓய்வூதியக் கருத்துருக்கள் சார்ந்த விவரங்கள் சென்னை மாநிலக் கணக்காயர்/ கருவூல கணக்கு ஆணையரகத்திற்கு அனுப்பப்பட்டு அனைத்து பணியாளர்களின் ஓய்வூதிய பணப்பலன்கள் விரைந்து பெற்று வழங்கிட தெரிவிக்கப்படுகிறது.

- DCRG & GPF நிலுவை தொடர்பாக ஏப்ரல் 2024 முதல் ஏப்ரல் 2025 வரை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் சிலருக்கு ஏற்கனவே மாநிலக் கணக்காயரிடமிருந்து ஆணை வரப்பெற்று பணம் பெற்று வழங்கப்பட்டிருக்கும், அதன் விவரத்தை உள்ளீடு செய்து அதனை 2 நகல்கள் மற்றும் மாநிலக் கணக்காயரின் ஆணை 2 நகல்கள் (DCRG & GPF) அனுப்பப்பட வேண்டும்.
- DCRG & GPF மே2025 முதல் அக்டோபர் 2025 வரை ஓய்வு பெறவுள்ள ஆசிரியர்களுக்கு/ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு, ஓய்வூதிய கருத்துரு அனுப்பப்பட்ட விவரத்தினை உள்ளீடு செய்து அதனை 2 நகல்களில் அனுப்பப்பட வேண்டும்.
- CPS சார்ந்த விவரத்தினை உள்ளீடு செய்து பங்களிப்பு ஓய்வூதிய தொகை பெற்று வழங்கப்பட்டிருந்தால் MTC 70 & ECS Copy (2 நகல்கள்) மற்றும் உள்ளீடு செய்த விவரத்தினை 2 நகல்களில் அனுப்பப்பட வேண்டும்.
- மே 2025 முதல் ஜூன் 2025 வரை ஓய்வு பெறவுள்ள பணியாளர்களுக்கான ஓய்வூதிய கருத்துருக்கள் மாநிலக் கணக்காயருக்கு 31.05.2025க்குள் அனுப்பப்பட வேண்டும்.

(குறிப்பு :– ஏப்ரல் 2024 முதல் ஏப்ரல் 2025 வரை உள்ள DCRG & GPF ஒரு நபருக்கு இரண்டு Employee ID இருந்தால் பழைய ID, Re Employment ID குறிப்பிட்டு அனுப்பவும்)

இணைப்பு : Google Sheet (1 to 5)

//ஒப்பம்//

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,
தலைமையாசிரியர்கள்,
அரசு/ நகரவை/ நிதியுதவி/ உயர்/ மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர்.

நகல்.

1. மாவட்டக் கல்வி (இடைநிலைக் கல்வி) அலுவலருக்கு தக்க நடவடிக்கைக்காக அனுப்பலாகிறது.
2. கோப்பிற்கு.